ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2383/34 - 2024 මැයි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.05.09
2383/34 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்*

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும்-

(அ) அமைச்சரவை, 2024, ஏப்பிறல் 29 ஆந் திகதிய 24/0781/631/020 ஆம் இலக்க அதன் தீர்மானத்தின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாகக் குறித்தலை அங்கீகரித்துள்ளது எனவும் ;

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தைக் கருதுகின்றமைக்கான நியாயமான தன்மை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவுள்ளது எனவும் ;

(இ) சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் எனவும் ; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் முடிவுறுதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
2024, மே 07.

1A - PG 6723 — 289 (2024/05)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை I

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமொன்றாகக் குறிக்கப்பட்ட வியாபாரம் பற்றிய விபரங்கள்

| | |
|---|---|
| 1. அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் | சைனா ஹார்பர் எஞ்சினியரிங் கம்பனி (லங்கா) லிமிட்டெட் |
| 2. உரிம இல. | 2311240032 |
| 3. கரைகடந்த கம்பனி பதிவு இலக்கம்: | பீசீசீ 00290488 |
| 4. செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகுப்பாக்கம் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் |
| 5. விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளுக்கான உரித்துடைமை | சைனா ஹார்பர் எஞ்சினியரிங் கம்பனி (லங்கா) லிமிட்டெட் ஆனது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக மட்டுமே குறிக்கப்படுகின்றதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதனிலை வியாபாரம் ஒன்றாகக் குறிக்கப்படுவதற்குத் தகவுடையதாகவில்லை. |
| 6. தகவுடைமைக் கட்டளைகள் | 2023, ஒகத்து 04 ஆந் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரம் (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 4(2)(ஔ), (க), (ங) மற்றும் 4(3)(அ) எனும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள். |
| 7. ஏற்புடையற்பாலதான விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரம் (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன் மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட திட்டம். |

## அட்டவணை II

### செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரமாகக் கருதுவதற்கான நியாயமான தன்மை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 53(5) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறு தேசிய நலன் அல்லது தேசிய பொருளாதாரத்தின் மேம்பாடு என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, கொழும்புத் துறைமுக நகரத்தை ஸ்தாபிக்கின்ற வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக வியாபாரங்களை நியமிப்பதில், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

சைனா ஹார்பர் எஞ்சினியரிங் கம்பனி (லங்கா) லிமிட்டெட் (CHINA HARBOUR ENGINEERING COMPANY (LANKA) LIMITED ('CHEC Lanka) என்பது சீனாவில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட சைனா ஹார்பர் எஞ்சினியரிங் கம்பனி லிமிட்டெட் (CHINA HARBOUR ENGINEERING COMPANY (LIMITED) நிறுவனத்தின் ஒரு முழுமையான துணை நிறுவனமாகும் என்பதோடு ஹொங்கொங் மற்றும் ஷாங்காய் பங்குப் பரிவர்த்தனைகளில் பட்டியலிடப்பட்ட சர்வதேச ரீதியாக அறியப்பட்ட சைனா கமியூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி லிமிட்டெட் (China Communications Construction Company Limited ('CCCC') நிறுவனத்தின் பகுதி நிறுவனமும் ஆகும். சொல்லப்பட்ட சைனா கமியூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி லிமிட்டெட் நிறுவனம் உலகில் 145 நாடுகளில் இயங்கி வருகின்றது என்பதோடு 2022, திசெம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கு 771 பில்லியன் ஹொங்கொங் டொலர்கள் (ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 91 பில்லியன்) விற்பனைப் புரள்வு பதிவு செய்தது என்பதோடு சைனா கமியூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி லிமிட்டெட் நிறுவனம் 124.62 பில்லியன் ஹொங்கொங் டொலர்கள் (ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 15.91 பில்லியன்) சந்தைப் பெறுமதியைக் கொண்டுள்ளது என்பதோடு 2024, மாச்சு 06 ஆந் திகதியில் உள்ளவாறு போர்சூன் 500 கம்பனிகள் பட்டியலில் 63 ஆம் இடத்திற்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. சைனா கமியூனிகேஷன்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி லிமிட்டெட் நிறுவனம் தொடர்ந்து 16 வருடங்களாக போர்சூன் 500 கம்பனிப் பட்டியலில் இருந்து வருகின்றது.

*செக் லங்கா லிமிட்டெட் நிறுவனம் 210 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதன் மூலம் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகர (அபிவிருத்திக் கட்டுப்பாடு) ஒழுங்குவிதிகளில் (அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்) பட்டியலிடப்பட்டுள்ள நிலைபேறான தன்மை தொடர்பான சட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கு ஏற்ப, கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் உள்ள இரண்டு திட்டங்களில் நிலையான அபிவிருத்தியை மேற்கொள்ளும். அதாவது "கொழும்புத் துறைமுக நகர சொகுசு விலாக்கள்" (துண்டு இல. 02-01-01) மற்றும் "கொழும்புத் துறைமுக நகர வியாபார நிலையம்" (துண்டு இலக்கங்கள் 01-01-04, 01-01-05 மற்றும் 01-01-11). மேற்கூறிய இரண்டு திட்டங்களுக்காக வேர்ல்ட் க்ரீன் பில்டிங் கவுன்சில் அமைப்பிலிருந்து பசுமை தரப்படுத்தல் முறைமை ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான செயல்முறையை செக் லங்கா நிறுவனம் முன்னெடுத்துள்ளது.*

*இந்த நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளினூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களுக்கு சுமார் 1000 வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கின்ற அதேவேளை அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் காணித்துண்டுகளை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்வதனைத் தொடர்ந்து செக் லங்கா நிறுவனத்தினால் ஏனைய காணித்துண்டங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு அதனூடாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் குறிப்பாக கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை மேலும் மேம்படுத்துவதற்கும் பங்களிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின்படி, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான சக்தி அதிகார சபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட இலங்கையில் சக்தி வினைத்திறன் கட்டியெடுப்புதல் 2008 மற்றும் இலங்கை சக்தி வினைத்திறன் கட்டியெழுப்புதல் சட்டக்கோவை 2016 உட்பட அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் பல்வேறு நிலைபேறான நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.*

*நடைபாதைகள், நீர் வழிகள், பசுமையான இடங்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கான பொதுவான பகுதிகள் போன்ற நகர்ப்புற வசதிகளை உள்ளடக்கிய சொகுசு விலாக்களின் நிலைபேறான வளர்ச்சி, தெற்காசியாவில் நிலையான நகர்ப்புற வாழ்க்கைத் தரத்தை மறுவரையறை செய்வதை நோக்கமாகக் கொண்டது மற்றும் கொழும்புத் துறைமுக நகரத்தை ஆடம்பரமான வாழ்விட மையமாக நிலைநிறுத்துகிறது. இதன் மூலம் அதிக நிகர மதிப்புள்ள நபர்களை ஈர்க்கிறது என்பதோடு நகரத்தின் உலகளாவிய முறையீட்டிற்கு பங்களிக்கிறது. இது ஸ்மார்ட் இல்லத் தீர்வுகளை* (Smart home solutions) *அறிமுகப்படுத்துவதற்கும் நிலைபேறான வாழ்க்கை நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் அதிநவீன தொழில்நுட்பங்களை ஒருங்கிணைக்கிறது.*

*வணிக நிலையத்தின் நிலைபேறான மேம்பாடு, 20,000 சதுர மீட்டர் அலுவலக இடத்தை உள்ளடக்கியதாக வணிக மையத்தில் பணிபுரிபவர்களுக்கான பொதுவான பகுதிகள், வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் பசுமையான இடங்கள் போன்ற நகர்ப்புற வசதிகளை உள்ளடக்கி நிலைபேறானதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், வங்கியியல், நிதிச் சேவைகள், தொழில்முறை சேவைகள், வர்த்தகம், போக்குவரத்து மற்றும் உலகெங்கிலும் உள்ள பல்வேறு தொழில்கள் போன்ற வணிகங்களில் ஈடுபடும் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் தங்கள் செயல்பாடுகளை நிறுவ உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறான வர்த்தகர்களை இந்த அபிவிருத்திக்கு ஈர்ப்பதன் மூலம் இலங்கைக்கு மேம்பட்ட தொழில்நுட்பத்தை கொண்டு வருவதுடன் வேலை வாய்ப்புக்கான வாய்ப்புக்களை உருவாக்கி, பிராந்தியத்தில் திறன் மேம்பாட்டை வளர்க்கும், இது கொழும்புத் துறைமுக நகரத்தின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு கணிசமான பங்களிப்பை வழங்கும்.*

*கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் பல்வேறு சேவைத் துறைகளின் அபிவிருத்தியுடன் குடியிருப்பு சமூகம் மற்றும் அலுவலக இடங்களை ஸ்தாபிப்பதனூடாக, விட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமன்றி, உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அதிகரித்த தேவையையும் தூண்டுகிறது. இதன் மூலம் இலங்கையில் மேலும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. வளர்ந்து வரும் குடியிருப்பு சமூகம் மற்றும் வணிக மையம் ஆகியவை கொழும்புத் துறைமுக நகரத்திற்குள் மேலும் வளர்ச்சிக்கு ஊக்கியாக செயல்படும்.*

**அட்டவணை** III

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்**

| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்* |
|---|---|
| 1. 2017ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம் | (அ) பகிர்ந்தளிக்கப்பட்ட எல்லா வருமானங்களும், இலாபங்களும் மற்றும் பங்கிலாபங்களும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.<br>(ஆ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பிடித்து வைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |

| அட்டவணை III *(தொடர்ச்சி)* | |
|---|---|
| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகள்* |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க. நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டுக் கொள்வனவுகளும், இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 6. சுங்க கட்டளைச் சட்டம் (235 ஆம் அத்தியாயமான) | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 11. களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் (267 ஆம் அத்தியாயமான) | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்புத் துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர்ந்த இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

| அட்டவணை IV<br>வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களின் செல்லுபடியாகும் காலப்பகுதி | | |
|---|---|---|
| *சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *தொடங்கும் திகதி* | *முடிவுறும் திகதி* |
| *1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *6. (235 ஆம் அத்தியாயமான) சுங்க கட்டளைகள் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்* | *ஏற்புடையதல்ல* | *ஏற்புடையதல்ல* |
| *10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்* | *ஏற்புடையதல்ல* | *ஏற்புடையதல்ல* |
| *12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்* | *2024, ஏப்பிறல் 20* | *2049, ஏப்பிறல் 19* |
| *13. 2010 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்* | *ஏற்புடையதல்ல* | *ஏற்புடையதல்ல* |

EOG *05 - 0078*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*